Registered as a News Paper
பக்கங்கள் 04
விலை ரூபா; 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM | Peoples Daily மக்கள் தினசரி

நாதம் ௩3 | திருவள்ளுவர் ஆண்டு 2023 | ஆனி 15 | 29-06-1992 | திங்கட்கிழமை | ஓசை 132

## சிதைந்த கை பொருத்தும் சத்திர சிகிச்சையில் வெற்றி

மிகவும் கடினமான சத்திரசிகிச்சையொன்று அதிசயிக்கத் தக்கவகையில் வெற்றியளித்துள்ளது. இலங்கையில் இத்தகைய சத்திரசிகிச்சை முதல் தடவையாக இப்போதுதான் நடைபெற்றுள்ளது. பெருந்தோட்டத் துறையின் முன்னாள் எழுதுவினைஞரான தோமஸ் டி. சில்வா என்பவர் தமது மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யும்போது ஓடுகள் ஏற்றிவந்த லொறியொன்றினால் மோதுண்டபோது அவரது இடதுகரம் பலத்த சேதமடைந்தது. அதனையடுத்து அவர் ராகம ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டபோது அவரது கை அகற்றப்பட வேண்டுமென்றே டாக்டர்கள் பெரும்பாலும்

(4ஆம் பக்கம் பார்க்க)

## (புல்லாவெளியில் போர் வெடித்தது)

# புலிகள் - இராணுவம் உக்கிர சண்டை

# படைக்கு பலத்த இழப்பு; வாகனங்கள் நாசம்

## படையினரின் முயற்சி முறியடிப்பு

(நமது நிருபர்)

வெற்றிலைக்கேணி கட்டைக்காட்டு இராணுவ முகாம்களில் சமீபகாலமாகக் குவிக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான துருப்புக்கள், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் துணையுடன் நேற்றுக்காலை முன்னேற முயன்றபோது அவர்களை இடைமறித்து விடுதலைப் புலிகளின் படையணிகள் கடும் சண்டையில் ஈடுபட்டனர். பலமணி நேரமாகத் தொடர்ந்து நடைபெற்ற சண்டையில் இராணுவத்தினர் தரப்பில் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டதுடன் பல கவசவாகனங்களும் நாசமாக்கப்பட்டன. இராணுவத்தின் முயற்சி முறியடிக்கப்பட்டதினால் இராணுவத்தினர் தமது முன்னைய நிலைகளிலேயே தரித்துள்ளனர். இச்சண்டையில் விடுதலைப் புலிகள் எட்டுப் பேர் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

நேற்றுக்காலை 6-00 மணியளவில் ஆரம்பித்த இம்மோதல் மாலை 6-00 மணி வரையிலும் நீடித்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. வாடியடி முகாம், புல்லாவெளிக் கோவலடி, கட்டைக்காடு முனைப்பக்கம் ஆகிய முன்முனைகளில் வெளியேற முற்பட்ட இராணுவத்தினர் மீது புலிகள் கடும் தாக்குதலை நடத்தினர்.

சாளடின், பவள், சினதயாரிப்பு ரி-55 ரக டாங்கிகள் சகிதம் வெற்றிலைக்கேணி இராணுவமுகாமிலிருந்து பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் புல்லாவெளி சந்தி நோக்கி முன்னேற முற்பட்டனர். மும்முனைகளில் முன்னேறமுயன்ற இவ் இராணுவ அணியினரை விடுதலைப் புலிகள் எதிர்த்து கடும் சமரில் ஈடுபட்டனர்.

இதேவேளை இராணுவ முகாம்களில் இருந்து கடும் எறிகணை வீச்சும் இடம் பெற்றது.

பல மணி நேரமாக நடைபெற்ற இச்சண்டையில், சிறிலங்கா இராணுவத்தினரின் பல கவசவாகனங்கள் நாசமாகவும், பெருமளவு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும், பலர் படுகாயமடைந்ததாகவும் தெரியவருகின்றது.

மேலும் இத்தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபட்ட இராணுவத்தினர் பலர் கண்ணிவெடியில் சிக்கி தமது கால்களை இழந்ததாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

## 8 வேங்கைகள் வீரச்சாவு

(நமது நிருபர்)

வெற்றிலைக்கேணி இராணுவ முகாமிலிருந்து வெளியேறிய இராணுவத்தினருடனான மோதலில் எட்டு விடுதலைப் புலிகள் வீரச்சாவடைந்தனர்.

வீரவேங்கை இளங்கதிர் ...

பத்மநாதன் ஐயங்கேணி மட்டக்களப்பு), வீரவேங்கை வெற்றி (கனகலிங்கம் அருள்நேசன் மாசார், பளை). வீரவேங்கை கலைஞன் (நசீர் செல்வநாயகம் ரஞ்சன் புதுக்கொலனி மாவடிவேம்பு வந் ...

சார் - ஜேசுதாசன் கனிஸ்டன் புலேந்திரன் உரும்பராய் தெற்கு, உரும்பராய்), வீரவேங்கை எல்லாளன் (ஒட்டேகர் பொன்னுச்சாமி கிரிதரன் அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை), வீரவேங்கை ...

## இரத்ததானம் செய்யவும்

[யாழ்ப்பாணம்]

யாழ் போதனா வைத்திய சாலைக்கு இரத்ததானம் செய்யுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

தற்பொழுது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலைகாரணமாக ராணுவத்தினரின் தாக்குதல்களுக்கு இலக்காகி காயமடையும் பொதுமக்களின் உயிர்களை காப்பாற்றும் பொருட்டு இரத்ததானம் செய்யும்படி பொது மக்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றனர் (பா)

## தெரிவுக்குழு இன்று கூடும்

இனப்பிரச்சினை தீர்வுக்கான ஆலோசனைகளைச் சமர்ப்பிக்கவென நியமிக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழு இன்றுமுதல் வெள்ளிக்கிழமை வரை கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது அதாவது இக்வாரம் முழுவதும் தினமும் இக்குழுவினர் கூடவுள்ளனர்.

## இவ்வருட இறுதிக்குள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு

### - பிரேமதாஸா

இனப்பிரச்சினைக்கு இந்த வருட இறுதிக்குள் யாவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய நியாயமான தீர்வொன்று காணப்பட்டுவிடும் என்று சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாஸா நேற்று புத்தல கம்உதாவ கண்காட்சி மண்டபத்தில் உள்ளூராட்சித் தலைவர்கள் மத்தியில பேசும்போது தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கில் வாழும் மக்களின் வாழ்க்கை இந்தப் பிரச்சினையால் சீரழிந்துபோயுள்ளது. நாம் அனைவரும் ஒருங்கிணைந்து இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாணவேண்டியது அவசியம்.

கடந்த 20 வருடமாக இந்தப் பிரச்சினை நாட்டு மக்களைத் தாக்கிவருகிறது. நாடு முன்னேற்றபாதையில் செல்ல வேண்டுமானால் இந்தப் பிரச்சினை தீர்த்து வைக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி சபை பிரதேச சபை, மாகாணசபை என்பவற்றிற்குக் கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்படுமெனவும் தெரிவித்தார்.

## காவல்துறை கைப்பற்றிய மண்ணெண்ணெய் விநியோகம்

சாப்பாய் இருபாலை பகுதிகளில் நேற்று பொதுமக்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. தமிழீழ காவல் துறையினரால் கைப்பற்றப்பட்ட மண்ணெண்ணையே இவ்வாறு விநியோகிக்கப்பட்டது.

பதுக்கப்பட்ட மண்ணெண்ணையைக் கைப்பற்றி பொதுமக்களுக்கு விநியோகிக்கும் நடவடிக்கைகளில் காவல் துறையினர் ஈடுபட்டிருப்பது தெரிந்ததே இவ்வாறு பிடிபடும் மண்ணெண்ணெய் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படு ...

லைப் புலிகள் வீரச்சாவு அடைந்தனர்.
வீரவேங்கை இளங்கதிர் (சூரியகுமார் - சின்னராசா

வநாயகம் ரஞ்சன்புதுக் கொலனி மாவடிவேம்பு வந்தாறுமூலை மட்டக்களப்பு) வீரவேங்கை எல்லாளன் (அன்

தரன் அம்மன் கோவிலடி வல்வெட்டித்துறை), வீரவேங்கை வீரமணி (திருஞானசம்பந்தன் ஜீ-குண

[4 ஆம் பக்கம் பார்க்க]

கள் தெரிவிக்கின்றன.

(4 ஆம் பக்கம் பார்க்க)

தினமும் இக்குழுவினர் கூட வுகின்றனர்.

கடந்த சில நாட்களாக

வதகுறிப்பிடத்தக்கது.

# விமானப்படை விமானங்கள் அகோரக் குண்டு வீச்சு

(தமது நிருபர்)

வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுப்பகுதிகளிலிருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினருக்கு உதவியாகக் கடற்படைப் பீரங்கிப் படகுகள், விமானப்படைவிமானங்கள் ஆகியன அகோரக் குண்டு வீச்சுத் தாக்குதல்களைப் பன்னிரண்டு மணிநேரமாக நடாத்தின.

நேற்றுக்காலை 6.30 மணி முதல் மாலை 6.30 மணிவரை வெற்றிலைக்கேணி, கட்டைக்காட்டுக் கடற்பரப்பு விலை நிலைகொண்டுள்ள பாரிய பீரங்கிப் படகுகளிலிருந்து தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன. இதே

## பளையில் ஒருவர் பலி

வேளை இரண்டு குண்டுவீச்சு விமானங்கள், இரண்டு அவ்ரோ விமானங்கள் கிளிநொச்சி கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி, தாளையடி, பளை,

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வெற்றிலைக்கேணி - ஆனையிறவு; 24 மணி நேரத்திற்குள் இணைக்க முடியுமாம்

(கொழும்பு)

ஆனையிறவையும் வெற்றிலைக்கேணியையும் தம்மால் 24 மணிநேரத்தில் இணைக்க முடியும் என கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவிததுள்ளன விடுதலைப் புலிகள் யாழ் குடாநாட்டிற்குள் ஊடுருவாமலும் அங்கி

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இறுதித் தாக்குதல் அல்ல; ஆனால் கடுமையானது

**- சிசில் வைத்தியரெட்னா**

(கொழும்பு)

வடக்கில் தற்போது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் தாக்குதல் நடவடிக்கைகள் இறுதித் தாக்குதல்கள் அல்ல என்று இராணுவத் தளபதி சிசில வைத்தியரட்ணா கொழும்பில் பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் மேலும் அவர் குறிப்பிடுகையில், குடாநாட்டில் பல முனைகளில் இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ள போதிலும், இது இறுதித் தாக்குதல் அல்ல என்றும் எனினும் முன்னைய நடவடிக்கைகளை விடக் கடுமையானதாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தொண்டமனாறு, பலாலி என்று குறிப்பிட்ட இடத்திலிருந்து அல்லாமல் பரவலாக வடமராட்சிக் கடற்பகுதியிலிருந்து காங்கேசன்துறை ஊடாக தீவுப் பகுதிவரை ஒரேசமயத்தில் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார். இந்நடவடிக்கைகளின் போது பீரங்கிப் படைகளின் உதவியுடன் விமானப்படை, விமானங்கள், ஹெலிக்கப்டர்கள், கடற்படை யுத்தக் கப்பல்கள் என்பனவும் செயற்படும் என்றும், முக்கிய நிலைகளைத் தேடி அழிப்பதே இந் நடவடிக்கையின் நோக்கம் என்றும் தெரிவித்தார்.

# 15 காவலரண்கள் தகர்ப்பு வன்னியில் புலிகள் சாதனை

## 4 ராணுவத்தினர் பலி: பலர் காயம்

(வவுனியா)

வவுனியா சுடுவெந்த பிளவு காவலரண்கள் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதலொன்றை மேற்கொண்டனர் இத்தாக்குதலின் போது 15 இராணுவக் காவலரண்கள் முற்றாக அழிக்கப்பட்டன. நான்கு இராணுவத்தினர் பலியாகியதுடன் பலர் காயம் அடைந்தனர்.

நேற்று முன்தினம் நள்ளிரவு 11.30 மணியளவில் விடுதலைப் புலிகள் இத்திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர். சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற இத்தாக்குதலில் நான்கு நவீனரக துப்பாக்கிகள் உட்பட பல வெடிப் பொருள்களும் இராணுவ உபகரணங்களும் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் நான்கு போராளிகள் வீரச்சாவு அடைந்தனர்.

## வீரச்சாவு



**கடற்புலி கப்டன் ஆதித்தன்**

தாளையடி கடற்பரப்பில் 28 - 02 - 1992 அன்று சிறிலங்கா கடற்படையினருடனான மோதலில் விழுப்புண் பெற்று சிகிச்சை பெற்று வந்த விடுத

[4 ஆம் பக்கம் பார்க்க]

## 4 வேங்கைகள் வீரச்சாவு

வவுனியா சுடுவெந்தபிளவு தொடர் காவலரண்கள் மீது 27-06-1992 அன்று விடுதலைப் புலிகளால் மேற்கொள்ளப்பட்ட துணிகரத்தாக்குதலின் போது நான்கு போராளிகள் வீரச்சாவைத்தழுவிக்கொண்டனர்.

வீரச்சாவு அடைந்த லெப்டினன் ரகு (பெரியதம்பி குகதாஸ் பழைய றோட் சந்தி உடையார்கட்டு முல்லைத்தீவு) லெப்டினன் சிலம்பரசன் (றம்போ-பரமானந்தம் தயாளர் கட்சன் வீதி வட்டக்கச்சி கிளிநொச்சி) 2 ஆம் லெப்டினன் புகழேந்தி (நாகராசச மோகனராசா 4 ஆம் யுனிட். வாரிக்குட்டியூர் பாவற்குளம் வவுனியா) வீரவேங்கை மகேந்திரன் (பூலோகசிங்கம் பத்மலோஜன் சேமமடு வவுனியா) ஆகியோருக்கு தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

## கைப்பற்றப்பட்ட ஆயுதங்கள்

வவுனியா சுடுவெந்த பிளவு தொடர் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகளால் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் போது கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம் வருமாறு:

- ★ ஜீ3ஏ3 ரகதுப்பாக்கி - 01
- ★ ரி 56 புதிய ரக துப்பாக்கி - 02
- ★ ரி56-2ரகதுப்பாக்கி - 01
- ★ 303மெகஸ்தீசடுகுழல் - 01
- ★ 303 மகசின் - 01
- ★ ஏ.கே. மகசின் - 08
- ★ ஜீ3 மகசின் - 04
- ★ 303 ரவைகள் - 1700
- ★ நேட்டோரவைகள் - 177
- ★ நடுத்தர ரவைகள் - 562
- ★ ஜே ஆர் கைக்குண்டு - 02
- ★ ஏ.கே கோல்சர் - 03
- ★ தலைக்கவசம் - 08
- ★ சப்னே கோல்சர் - 02
- ★ மில்ரி பெல்ட் - 02
- ★ மழை அங்கி - 01

## யாழ். பயணிகள் ஓமந்தையில்

யாழ்ப்பாணம் நோக்கிவந்த கொழும்புப் பயணிகள் யாழ்ப்பாணம் வரமுடியாமல் ஓமந்தையில் தங்கியுள்ளனர்.

நேற்றுக்காலை கொழும்பில் இருந்து புறப்பட்ட இப்பயணிகள் கட்டைக்காடு-ஆனையிறவுப் பகுதியில் நடைபெறும் சண்டை காரணமாகக் கொம்படி, ஊரியான் பாதைகள் மூடப்பட்டமையைத் தொடர்ந்து ஓமந்தையில் தங்கியுள்ளனர். (பா)

# வரி விளம்பரம்

## தவறி விட்டது

மு. அசோக்குமார் 4-ம்வட்டாரம் புதுக்குடியிருப்பு எனும் முகவரியுடைய அடையாள அட்டையுடன் கூடிய கைப்பை ஒன்று 24-06-1992 அன்று ரெட்பானா சந்திக்கும்-விஸ்வமடு விடுதலைப் புலிகள் காரியாலயத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் விஸ்வமடு விடுதலைப் புலிகள் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவாக கேட்டுக் கொள்ளுகிறோம். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (2730)

## 200 நாடகங்கள்

யாழ்ப்பாணப் பேச்சு வழக்குத் தமிழில் முதன்முதலாக நாடகங்கள் எழுதி அரங்கேற்றிய பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் மாணவர்களில் இன்று நாடகம் எழுதும் ஒரேயொரு மாணவனான - 200க்கும் அதிகமான நாடகங்கள் எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள்: வெட்டிக்காரர்கள் 25/- , முதலாம்பிள்ளை 30/- (2722)

## டில்கா வாச் வேக்ஸ்

பாவித்த நல்ல நிலையில் உள்ள கடிகாரங்கள் வாங்கப்படும் விற்கப்படும். பழுதடைந்த கடிகாரங்களும் உதிரிப்பாகங்களிற்காக வாங்கப்படும். சகல மணிக்கூடுகளும் உத்தரவாதத்துடன் திருத்தி கொடுக்கப்படும். DILKA WATCH WORKS ,404/1 ஆஸ்பத்திரி வீதி (பஸ் நிலைய முன் மேல் மாடி) யாழ்ப்பாணம். (2731)

## அதிபர் பதவிக்கான நேர்முகப் பரீட்சை

(கொழும்பு)

எதிர்வரும் பத்தாம் திகதி அன்று தரம் ஒன்று அதிபர் பதவிக்கான நேர்முகப்பரீட்சை கொழும்பு கல்வியமைச்சு அமைந்துள்ள இசுறுபாயாவில் நடத்தப்படும் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த நேர்முகப்பரீட்சைக்கென வடக்கு, கிழக்கு மாகாணங்களிலிருந்து மூட்பது தரம் இரண்டு அதிபர்கள் அழைக்கப் பட்டுள்ளனர். திறமை, சேவை மூப்பு, தகைமை என்பவற்றின் அடிப்படையிலேயே இந்த நியமனம் வழங்கப்படுமென கல்வி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

# தமிழ்ப் பாடசாலைகளில் சிங்கள அதிபர்கள்

[மத்துகம]

ஹொரவல, மத்துகம கல்விக் காரியாலயத்தை உள்ளடக்கிய தோட்டங்களில் உள்ள சில தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள இனத்தைச் சேர்ந்தவர்கள் அதிபர்களாகக் கடமையாற்றுகின்றனர்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பின்வரும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் 1992 ஆகஸ்ட் 17-ம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

பதவிகள்:

1. புவியியலில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
2. மொழியியல் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
3. தமிழில் சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1/ சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11/ உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்)
4. கர்நாடக வாய்ப்பாட்டு/ வீணை/ வயலின் போதனாசிரியர் தரம் 111

சம்பள அளவுத்திட்டம்

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1; ரூபா 9,600 - 8x250 - 11,600/- (மாதமொன்றுக்கு)

சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 11; ரூபா 8,000 - 5x250 - 9,250/- (மாதமொன்றுக்கு)

உதவி விரிவுரையாளர்: ரூபா 3,900/- மாதமொன்றுக்கு (நிலையானது) ஆண்டு ஒன்றுக்கு (தகுதிகாண்)

போதனாசிரியர்: ரூபா 3,000/- (மாதமொன்றுக்கு)

(துறைத்தலைவரினாலும் பீடாதிபதியினாலும் ஓராண்டுச் சேவையைத் திருப்திகரமாக நிறைவு செய்துள்ளாரென அத்தாட்சிப்படுத்தப் பட்ட உதவி விரிவுரையாளர் (தகுதிகாண்) ஒருவரை விரிவுரையாளர் (தகுதிகாண்) என்ற பதவிப் பெயரில் நியமிக்கலாம் என்பதுடன் துணைவேந்தர் அவரை ரூபா 4,500/- 10x200 - 6,500/- (மாதமொன்றுக்கு) சம்பள அளவுத்திட்டத்தில் வைக்க முடியும்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தாபனக்கிளையின் சிரேஷ்ட உதவிப் பதிவாளரின் அலுவலகத்தில் கிடைக்கக் கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவர்கள் 23x10 சதமீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு ரூபா 2/- முத்திரையொட்டப்பெற்ற தபால் உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணபிக்க விரும்புவோர் தனித்தனி விண்ணப்பங்கள் அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்களின் சிறப்பு தகைமைகளையும் / அல்லது அனுபவத்தையும் கவனத்திற் கொண்டு சம்பள அளவுத்திட்டத்தின் பொருத்தமான படியில் வைக்கப்படுவர்.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1992 06 25 [சி/1619]

# 31-ம் நாள் நினைவஞ்சலி



| வீர ஜனனம் | வீரச் சாவு |
|---|---|
| 5 | 30 |
| — | — |
| 12 | 05 |
| — | — |
| 1972 | 1992 |

## லெப்டினன்ட் மைந்தன்

(முருகேசபிள்ளை - சிறீதரன்)

சத்தியம் தர்மமென சாற்றிய பெரியோரின்
சொல்வாக்கின் சுவை அறிந்து
சத்தியத்தின் வழி நின்று சாதனைகள் பல புரிந்தும்
சாய்க்கிறார் செவி இல்லை என்று,
சத்தியம் செய்து தமிழ் ஜெகம் மீட்க சென்ற உன்னை,
சதிகாரக் கும்பல்கள் சாய்த்தனரோ.

உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கும்
அன்புப்பெற்றோர்
சகோதர,
சகோதரிகள்.

பழையகமம்
முரசு மோட்டை
பரந்தன்.

(2713)

# 31-ம்நாள் நினைவுதினம்



தமிழீழம் உலகோடு சமமாக நின்று
தலைதூக்கி நிலைபெற்று வளமாக வேண்டும்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலியும் நினைவுநாள் அழைப்பும்



## லெப்டினன்ட் காந்தன்

(சுப்பிரமணியம் சிவகணேஷ்)

நெளுக்குளம் வவுனியா

| அன்னை மடியில் குலக்கொழுந்தாக | ஆனையிறவில் குல விளக்காக |
|---|---|
| 07. 08. 1972 | 10. 07. 1991 |

திதி. 29. 06. 92

தமிழீழம் என்னும் இலட்சியப் பாதையில் ஆனையிறவு எதிரிப்படை முகாம் உடைத்தெறிய உன்னோடு களம் புகுந்து சங்கமித்த அனைத்து வீரவேங்கைகளின் ஆத்ம சாந்தி வேண்டி எம்முயிர் உள்ளவரை உன்பணி தொடர்வோம்.

29. 06. 92, பகல் எமதில்லத்தில் நடைபெறும் அன்னாரின் நினைவுநாள் மதிய போசனத்தில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்கள், சகபோராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தற்போதைய முகவரி
வ. சுப்பிரமணியம்
இல. 40, முருகேசர் ஒழுங்கை
நல்லூர்,

அப்பா, அம்மா,
தங்கைகள் கௌரி, லதா
உன் துயர்போக்க
எம்மோடிணைந்த
தம்பி ஜெயா

(2700)

நினைவு கூருகின்றோம்...

அமைச்சின் உயரதிகாரி ஒரு வர் கூறியுள்ளார்.

## கொடுப்பனவு

(யாழ்ப்பாணம்)

லங்கா சிமெந்து லிமிட்டட் ஊழியர்களின் யூன் மாதச் சம்பளத்தின் இருபத்தைந்து வீத கொடுப்பனவுகள் இன்று திங்கட்கிழமை சுன்னாகத்திலுள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என மேற்படி நிறுவன உதவிப் பொதுமுகாமையாளர் பி. ஜே அன்ரனிப்பிள்ளை தெரிவித்துள்ளார்.

## தலைவர் தெரிவு

(மண்டைதீவு)

வடபிராந்திய வர்த்தக தொழிலாளர் சங்க புதிய தலைவராக திரு. இராசா (சின்னத்துரை) தெரிவு செய்யப்பட்டுள்ளார். (88)

## மடுமாதா கொடியேற்றம்

(மடு)

மன்னார் மாவட்டத்திலுள்ள மடுமாதா திருப்பதியில் நேற்று முன்தினம் கொடியேற்றம் இடம் பெற்றது. ஜூலை 2 ஆம் திகதி திருவிழாவை நடத்த வண. பிதா யேசுராசா ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாணசபை உறுப்பினர் வெளியேற்றம்

(கொழும்பு)

மேல் மாகாணசபையின் உறுப்பினர்கள் இருவர் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டனர். சபைத்தலைவருக்கு மரியாதை செலுத்தத் தவறியதையடுத்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இருவர் பொலிசாரின் உதவியுடன் சபையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

---

யாழ்ப்பாணம், பல்கலைக்கழகம்,

கிளிநொச்சி விவசாயபீடம்

# கேள்விப்பத்திரம்

யாழ். பல்கலைக்கழகம் தனது கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய பீடத்தில் (இராமநாதன் விவசாயப்பண்ணை) உற்பத்தி செய்த பாவனைக்குரியதும், விதைப்பதற்குரியதுமான நெல்லை விற்பனை செய்வதற்காகக் கேள்விப்பத்திரங்களைக் கோருகிறது.

1. விதை நெல் - இனம் H 4, BG 350 (சிவப்பு), BG 400-1 [வெள்ளை]
2. பாவனைக்குரிய நெல்-இனம் BG 400-1 (வெள்ளை)

கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்போர், பின்வரும் விபரங்களைக் குறிப்பிடல் வேண்டும்.

1. தேவைப்படும் இனம்
2. தேவைப்படும் அளவு
3. புசல் ஒன்றிற்குச் செலுத்த விரும்பும் விலை
4. விதைநெல் / பாவனைக்குரிய நெல்

விற்பனை விலை. விற்பனை செய்யக்கூடிய அளவு ஆகியன கிடைக்கப்பெறும் கேள்விப்பத்திரங்களின் அடிப்படையில், யாழ். பல்கலைக்கழக கேள்விச்சபையினால் தீர்மானிக்கப்படும்.

கேள்விப்பத்திரங்கள் முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியினையோ ஏற்கும் / நிராகரிக்கும் உரிமை பல்கலைக்கழகத்திற்கு உரியது.

யாழ் பல்கலைக்கழக கேள்விச்சபையின் முடிவே இறுதியானது.


கேள்விப்பத்திரங்கள் 1992 07 17-ம் திகதி பிற்பகல் 2 00 மணிக்கு அல்லது முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ கீழ்க் கண்ட முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

நிதியாளர்,
யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

கேள்விப்பத்திர தபால் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "நெல் விற்பனைக்கான கேள்விப் பத்திரம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 1992.07 17-ம் திகதி பி.ப 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக சபை அறையில் திறக்கப்படும்.

(சி/4605) -பதிவாளர்

---



## மேஜர் எழிலமுதன் (சுதன்)

(நமசிவாயம் உமாசுதன்)

வீரஜனனம் : 21 - 06 - 1970

வீரச்சாவு : 30 - 05 - 1992

தங்கத்தமிழ்த் தாயின் தளை ஒடித்து
தரணிதனில தமிழன் தலைநிமிர்ந்து நிற்க
தம்பிதனின் தனிப்படையை நடாத்திச்சென்று
சிங்களத்தின் மூதுகொடிக்கச் சென்றனை நீ
சங்கடத்தில் தவித்திருக்கும் தருணமிதில்
எங்கு சென்றாய் எழிலமுதா எம்மை விட்டு
ஏங்கும் எங்கள் நெஞ்சமது என்னவென்று ஆறும்
மறத்தமிழர் நாமென்று மார்தட்டி நேர்சென்றாய்
மாண்புமிகு மக்களென்று மடையர்க்குக் காட்டினாய்
உன் உருவம் அழிந்தாலும் உரங்குன்றா உன்தோழர்
ஒளியேற்றி வைத்திடுவர் உலுத்தர்களைச் சாடிடுவர்
தூங்கும்புலி அல்லவடா தமிழர் இன்று
துணிந்துவிட்டோம் துளைத்தெடுப்போம்அரக்கர் நெஞ்சம்
ஓங்கு புகழ் தமிழீழம் உதித்தே தீரும்
உலகமெல்லாம் புலிக்கொடிகள் உயர்ந்தே ஆடும்
உன் கனவு நனவாகும் காலம் மாறும்
உலகில் உள்ள தமிழர் எல்லாம் உறக்கம் நீங்கிச்
சுந்தரத்தமிழ் தன்னில் கீதம் பாடிச்
சுதந்திரத்தைச் சுகித்திடுவோம் சுதனின் சார்பில

30 - 05 - 92 அன்று தச்சங்காட்டுப்பகுதியில் சிங்கள இராணுவத்துடன் நேர்ந்த நேரடி மோதலில் வீரச்சாவெய்திய மேஜர் எழிலமுதனின் [சுதன்] 31 ஆம் நாள் நினைவுதினம் இன்று 29 - 06 - 92 திங்கட்கிழமை அனுஷ்டிக்கப்படுகிறது.

அன்பர்கள் அனைவரும் தயவுசெய்து வருகைதரவும்.

குடும்பத்தினரும், நண்பர்களும்

கூழாவடி,
ஆனைக்கோட்டை

(சி/4606)

---

## நினைவு கூருகின்றோம்...

## 1992-06-29

1984 ஆம் ஆண்டு இதேதினத்தில் சரவணையில், சிறிலங்கா காவல்துறையினருடன் ஏற்பட்ட மோதலின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**ஸ்ரீபன்** [எஸ். ஆனந்தராஜா - அனலைதீவு]

1989 ஆம் ஆண்டு மணலாறு - நாயாற்றுப் பகுதியில், இந்தியப் படையினருடனான நேரடி மோதலில் வீரச்சாவெய்திய -

**2 ஆம் லெப். குமரன்** (முருகுப்பிள்ளை சம்பந்தர் - சிவன்கோயிலடி, திருக்கோணமலை)

**நிசாம்** [யோகநாதசாமி தமிழ்ச்செல்வன் - கப்பைபறிச்சான், திருக்கோணமலை]

**மேஜர் ரஞ்சன்** (இராசதுரை சுரேஸ் -'தாயகம்' பன்னாலை, தெல்லிப்பழை)

1990 ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக எம்மைப் பிரிந்த -

**மங்களா** [பொ. சசிக்குமாரி - வவுனியா]

மன்னார் - பனங்கட்டிக் கொட்டுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது எதிர்பாராதவிதமாக மிதிவெடி வெடித்ததில் எம்மைப் பிரிந்த -

**2 ஆம் லெப். பாண்டியன்** (திரவியம் வீரசிங்கம் (எட்வின்) பெரியகடை, மன்னார்)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்காப் படையினரால் ரயர்போட்டு எரித்துக் கொல்லப்பட்ட பொத்துவில் உல்லையைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன்.

மட்டக்களப்பு - கல்லடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட நடவடிக்கைகளின் பின்னர் திரை அரங்கு ஒன்றினுள் இருந்து கருகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்ட நாவலடியைச் சேர்ந்த தமிழ் இளைஞன்.

மணலாறு / கொக்கிளாய், செம்மலை, நாயாறுப் பகுதிகளில் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட 4 தமிழர்கள்.

பளை கிழக்கில், சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்.

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4615)

### சிந்தனைக்கு

சாதாரணத் திறமையால் பேசமுடியும்
ஆனால் நோக்கித் தெளிவது, மேதையின் பொறுப்பு.
- பெஞ்சமின் டிஸ்ரேலி


# ஈழநாதம்

[illegible] வீதி, யாழ்ப்பாணம் 29-06-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2889 நிர்வாகபீடம் [illegible]
த.பெ. எண் [illegible]


## தமிழர்களை ஏமாளிகளாக எண்ணும் இராணுவம்

யாழ்ப்பாண குடாநாட்டை விடுவிக்கவும், தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவும், சிறிலங்கா இராணுவம் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ள இருப்பதாக யாழ் மாவட்ட இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான சிறிலங்கா இராணுவத்தளபதி பிரிகேடியர் விஜேவிமலரட்ண நேற்றுமுன் தினம் யாழ்ப்பாண வானொலியில் ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

பிரிகேடியர் விஜேவிமலரட்ணாவின் பேச்சு தமிழர்கள் அனைவர்களும் மடையர்கள் என்ற ரீதியில் பேசப்பட்டதா அல்லது, பொறுப்பு வாய்ந்த அதிகாரியாக இருப்பதால் எதையும், எவ்வாறும் பேசலாம் என்ற ரீதியில் பேசப்பட்டதா என்பது குறித்து கேள்விகள் இருப்பினும், இராணுவம் எதைச் சொன்னாலும் தமிழர் கேட்கவேண்டும் என்ற ரீதியில் பேசப்பட்டுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இதுவரை பல்லாயிரக்கணக்கான தமிழரின் படுகொலைகளுக்கும் பலகோடிக்கணக்கான தமிழரின் சொத்துடைமை அழிவிற்கும் தமிழரின் கலை, பண்பாடு என்பனவற்றின் அழிவிற்கும் காரணமான சிறிலங்கா இராணுவம் தமிழர்களை மீட்கப் போவதாகவும் விடுவிக்கப் போவதாகவும் கூறுவதை தமிழர் ஏற்றுக் கொள்ள வேண்டும், நம்பவேண்டும் எனவும் சிறிலங்கா இராணுவத்தளபதி எதிர்பார்க்கின்றார். இது எந்தளவிற்கு பைத்தியக்காரத்தனமானது.

மக்கள் நீண்ட காலமாக ஆடியிருந்து வரும் வீட்டையும், அவர்களது உடைமைகளை கைவிட்டு விட்டு சில மணித்தியால நேரத்திற்குள் வெளியேறச் சொல்லும் சிறிலங்கா இராணுவம் தமிழர்கள் அனைவரும் உணர்ச்சிகளற்ற மரங்கள் என எண்ணுவது போல் உள்ளது. அவ்வாறு இல்லாவிட்டால், இவ்வாறான ஒரு அறிவிப்பை விட்டுவிட்டு, அதாவது மக்களை அகதி ஆக்கிவிட்டு, உங்களுக்காகவே அகதிகளாக்கினோம் எனக் கூறுவது போல உள்ளது.

சிறிலங்கா இராணுவமும், அரசாங்கமும் தமிழ் மக்கள் மீது மேற்கொண்டு/மேற்கொண்டு வரும் இனப்படுகொலையும், ஒடுக்கு முறையும் இன்று நேற்று ஆரம்பித்ததல்ல. பல தசாப்தங்களின் முன்னர் சிறிலங்கா இராணுவம் இனப்படுகொலையிலும், ஆக்கிரமிப்பு நடவடிக்கையிலும் இறங்கிவிட்டது. இந்த ஆக்கிரமிப்பின் விளைவுகளையும், படுகொலையின் விளைவுகளையும் இன்று தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

# சீனாவில் ஏற்படும் மாற்றங்கள் தீபேத்தியரின் பிரச்சினைக்கு தீர்வாகுமா?

தீபேத் சமய அரசியல் தலைவரான தலாய்லாமாவை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷும் பிரித்தானிய பிரதமர் ஜோன் மேயரும் அண்மையில் சந்தித்தனர். இச்சந்திப்பை அடுத்து தீபேத்தை தனது 'கொல்லைப் புறமாக' உலகின் ஏனைய பகுதிகளில் இருந்து தனிமைப்படுத்தி வைத்திருக்கமுடியாது என்பது சீன கம்யூனிஸ்ட் தலைவர்களுக்குத் தெளிவானது.

ஆப்கானிஸ்தானில் சோவியத் இராணுவ ரீதியில் நிலைத்திருக்கும் வரை சீனாவுக்கு இடைஞ்சல் ஏற்படுத்த மேற்கு நாடுகள் விரும்பவில்லை. ஏனெனில், ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் யூனியனை வெளியேற்றும் சர்வதேச முயற்சிக்கு சீனா ஆதரவளித்து வந்ததே அதற்கான காரணமாகும்.

எவ்வாறாயினும் - ஆப்கானிஸ்தானில் இருந்து சோவியத் யூனியன் வெளியேறியது மட்டுமன்றி தனி ஒரு நாடாக இருந்த சோவியத் யூனியனே பிளவுபட்டு வீழ்ச்சியடைந்தது

எனவே தலாய்லாமாவுடனான மேற்கு நாடுகளின் தலைவர்களின் சந்திப்பு சீனாவுக்கு அபாய மணியாகவே ஒலித்துள்ளது

சோவியத் யூனியனின் வீழ்ச்சி அதன் குடியரசுகளின் சுதந்திரத்துக்கு வழிவகுத்தது. சீனாவின் ஒரு பகுதியான சிங்கியாங்குடன் எல்லையைக் கொண்ட மத்திய ஆசியாவும் இதில் அடங்கும். சிங்கியாங்கின் மக்களுக்கு சீனாவின் ஹன் மக்களுடன் உள்ள இன, மத உறவுகளைக்காட்டிலும் நெருங்கிய உறவு அயலிலுள்ள கஸகிஸ்தான் தஜிகிஸ்தான், கிர்கீஷியா மக்களுடன் உண்டு. காலம் செல்ல இது சீனாவின் பிரதேச இறைமைக்கு ஒரு அச்சுறுத்தலாகலாம்.

1949 ஆம் ஆண்டில் கம்யூனிஸ்ட் சீனா ஏற்படுத்தப்பட்டது முதலே சர்வதேச அரசியலில் தீபேத் ஒரு முக்கிய பிரச்சினையாக இருந்து வருகிறது. தீபேத்துக்கு சீனா வழங்குவதாக உறுதியளித்த உண்மையான தன்னாட்சியை மறுப்பது தீபேத்தியரின் மதகலாசார உரிமைகளை நசுக்குவதன் மூலம் தீபேத்தியர் என்ற அடையாளத்தை ஒழிப்பதற்கான திட்டமிட்ட முயற்சியே ஆகும்.

காலத்திற்குக் காலம் ஹன் மக்களை பெருமளவில் குடியேற்றுவதன் மூலம் தீபேத்தியரை அவர்களது சொந்த மண்ணிலேயே சிறுபான்மையினராக்கும் சீனாவின் செயல் சர்வதேச ரீதியில் எதிர்ப்பை ஏற்படுத்தியது.

சீனாவின் ஆக்கிரமிப்புக்கு எதிராக தீபேத்திய மக்கள் நடாத்திய பெரும் கிளர்ச்சியும் அதை அடுத்து 1959ஆம் ஆண்டில் தலாய்லாமாவும் அவரது குழுவினரும் தீபேத்திலிருந்து இந்தியாவிற்கு ஓடியதும் பரந்தளவிலான சர்வதேச அனுதாபத்தைப் பெற்றன. தலாய்லாமா சுமார் மூன்று தசாப்தங்களாக இந்தியாவில் தங்கியிருந்ததும் நடவடிக்கைகளில் ஈடுபட்டதும் ஆசியாவின் இரு பெரும் நாடுகளான சீனாவிற்கும் இந்தியாவிற்கும் இடையிலான பெரும் கருத்து மோதும் விடயங்களாகின.

சோவியத்யூனியனில் கம்யூனிசத்தின் வீழ்ச்சி, உலகப் பொருளாதாரம் பூகோளமயப்படுத்தப்பட்டமை, மனித உரிமைகள் வலியுறுத்தப்பட்டமை போன்ற சர்வதேச அரங்கில் ஏற்பட்ட புதியதும் தீவிரமானதுமான மாற்றங்கள் சீனாவை பலவீனமான நிலைக்கு உள்ளாக்கின

இதைவிட சீனாவின் பொருளாதார சீர்திருத்தத்தின் வெற்றி பெரும்பாலும் மேற்கு நாடுகளினதும் ஜப்பானிய பொருளாதார உறவுகளிலுமே பெரிதும் தங்கியுள்ளது.

மனித உரிமைகள் கோட்பாட்டை மிக மோசமாக மீறும் நாடுகளில் ஒன்றாக சீனாவை மேற்கு நாடுகள் கருத, தனது உள்நாட்டு விவகாரங்களில் வெளியார் தலையீட்டுக்கு அது வழி வகுக்கலாம் என சீனா அஞ்சுகிறது. இப்பொழுது தலையீட்டுக்கான மிக உயிர்த் துடிப்புள்ள விடயம் தீபெத் ஆகும்.

இந்த வகையில் சீனப் பிரதமர் லீ-பென்னின் சமீபத்திய ஆறுநாள் இந்திய விஜயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகும் இந்தியாவில் தலாய்லாமா இருப்பதும் அவரது போராட்டத்திற்கு பரந்தளவு இந்திய ஆதரவு கிடைப்பதும் ஆபத்தானது என சீனாகருதுகிறது. மேற்குலக சார்பு போக்கைக் கடைப்பிடிப்பதற்கு எதிராக இந்திய அரசாங்கத்தை தூண்டுவது சீனப் பிரதமர் லீ-பெங்கின் இந்திய விஜயத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும் ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைகள் கமிஷனின் சமீபத்திய கூட்டம் ஒன்றில் தீபெத்திய மனித உரிமைகள் மீறல் பற்றிய பிரேரணையை இந்தியா எதிர்த்ததன் மூலம் அவ்விடயத்தில் சீனப்பிரதமர் வெற்றி கண்டார்.

சீனாவின் நிர்ப்பந்தத்துக்கு மத்தியிலும் இந்திய அரசாங்கம் தலாய்லாமாவினதும் ஏனைய தீபேத்தியரினதும் நடவடிக்கைகளை இந்தியாவில் கட்டுப்படுத்தாதது தீபேத்தியரின் அபிலாஷைகளுக்கு அனுதாபம் காட்டுவதையே காண்பிக்கின்றது. ஆனால், சீனாவுடன் தீர்க்கப்பட வேண்டிய நீண்டகால எல்லைத்தகராறு இந்தியாவுக்கு இருப்பதால் தீபேத்தியரின் அபிலாஷைகளுக்கு பகிரங்கமாக ஆதரவு தெரிவிக்க மறுக்கிறது.

எவ்வாறாயினும் சர்வதேச அரசியலிலும் பொருளாதாரத் துறையிலும் நடைபெற்று வரும் புதிய நிகழ்வுகளாலும் சீனாவுக்குள் ஏற்பட்டுவரும் மாற்றங்களாலும் தீபேத் மக்களின் சட்டபூர்வ கோரிக்கைகளை வழங்க சீன தலைமைப்பீடம் இறுதியில் நிர்ப்பந்திக்கப்படலாம் என டில்லியில் எதிர்பார்ப்புகள் உள்ளன.

நன்றி - இண்டர் கோ பிரஸ்

---

வவுனியா சிக்கன கடன் வழங்க

## கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாடு நிறுத்தம்

(வவுனியா)

வவுனியாவில் உள்ள சிக்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜம் செயல்பட முடியாத நிலையை அடைந்துள்ளது

சிறிலங்கா இராணுவத்தின் நடவடிக்கைகளினால பொது மக்களுக்கும் இச் சமாஜத்திற்கு மிடையே இருந்து வந்த தொடர்பு துண்டிக்கப்பட்டமையினால் மக்கள் மத்தியில் செயல்படும் நிலையை அது இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச்சமாஜத்தில் பணிபுரியும் பல ஊழியர்கள் கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து தமக்குரிய ஊதியப்பணத்தைப் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது

வவுனியாவில் கிராமப்புற மீதான இராணுவத்தின் தாக்குதல் நடவடிக்கையினால் இச் சமாஜத்தை நகரத்திற்கு மட்டும் செயல்படுத்த சமாஜ அதிகாரிகள் தீர்மானித்துள்ளனராம். [தி]

## மேஜர் முரளி நினைவுநாள் புதிர்ப் போட்டி

இன்று நடைபெறவுள்ள உடுப்பிட்டி, வல்வெட்டித் துறை, கொடிகாமம், வாணி...

கொத்தணிகளுக்கான போட்டி வியாழக்கிழமையன்றும் அத் துடன் ...

## உலக நிலைமைகளுக்கு ஏற்ப ஜப்பானுடன் உறவு அமையும்

- இந்தியப் பிரதமர் ராவ்

மாறி வரும் உலக நிலைமை மற்றும் ஆசியப் பிராந்திய நிலைமை தொடர்பாக தங்களது அரசியல் பேச்சு வார்த்தைகளை இந்தியாவும் ஜப்பானும் தீவிரப்படுத்த உள்ளன.

ஜப்பானில் ஐந்து நாள் பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்பும் வழியில் விமானத்தில் செய்தியாளரிடையே பேசும் போது இந்தியப்பிரதமர் நரசிம்மராவ் தெரிவித்தார்.

மேலும் ஜப்பானியதலைவர்களுடனான தமது பயனுள்ள பேச்சுவார்த்தைகள் இருதரப்பு பிணைப்புக்களினை மேலும் அதிகரிக்க புதிய அடித்தளம் ஒன்றை நாட்டியிருப்பதாக தெரிவித்தார்.

ஜப்பானிய தொழிலதிபர்களுடனான தமது பேச்சுக்கள் ...களை அதிகரிக்கவிரும்புவதை புலப்படுத்துகிறதுஎனவும் இந்தியா மேற்கொண்டபொருளாதார சீர் திருத்தங்களை அவர்களுக்கு புலப்படுத்தியதாகவும் தெரிவித்தார்.

எனினும் ஜப்பானிய பயணம் பற்றி செய்தியாளர் கேட்ட குறிப்பிட்ட கேள்விகளுக்குபதிலளிக்க மறுத்தஅவர் அடுத்த வார தொடக்கத்தில் செய்தியாளர்கூட்டத்தில்தாம் பேசப்போவதாக தெரிவித்தார்.

## 'தடா'வில் கைதானோர் மீது கை விலங்கு மாட்டப்படுகிறது

- கருணாநிதி கண்டனம்

[சென்னை]

'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்கள் மீது பழிவாங்கும் நோக்குடன் கை விலங்கும் மாட்டுகின்றனர் என்று தி.மு.க தலைவர் ...

ஜெகதீசன் நெஞ்சுவலி காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அவரையும் திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசனையும் சந்திப்பதற்கு நான் அனுமதி கேட்...

விளைவுகளையும் இன்று தமிழ் மக்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.

சிறிலங்கா இராணுவம், எப்பொழுதும், எங்குமே தமிழருக்குப் பாதுகாப்பு படையாக இருந்ததில்லை. சிறையில்கூட தமிழருக்கு பாதுகாப்பாக நிறுத்தப்பட்ட பாதுகாப்புப் படையினர் தமிழ்க் கைதிகள் சிங்களக் காடையர்களால் படுகொலை செய்யப்பட்ட போது கைகட்டிப்பார்த்துக் கொண்டு நின்றனர். இதே போன்றே சிறைக்கு வெளியில், காலத்திற்குக் காலம் தமிழர் மீது இன வன்முறை கட்டவிழ்த்துவிட்ட போது இராணுவம் கண்டும் காணாமலும் இருந்தது. பல இடங்களில் இராணுவம் படுகொலைகளுடன் நேரடியாகத் தொடர்புபட்டது.

பின்னர், கிழக்கிலும், வடக்கிலும் 40,000 க்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்களை இராணுவம் கொன்று குவித்தது. தமிழ் மக்களை படுகொலை செய்வது சிறிலங்கா இராணுவத்திற்கு பொழுதுபோக்கான ஒரு விளையாட்டாக மாறியது. தமிழர் சொத்தை சூறையாடலும், தமிழ்ப் பெண்களை மானபங்கம் செய்வதும் அவர்களின் சாதனைகளாயின.

அதேவேளை, தமிழர் தாயகத்தை ஆக்கிரமிப்பதும், அதில் இருந்து தமிழ் மக்களை விரட்டுவதும் அவர்களின் பிரதான பணிகளில் ஒன்றாகியது. இவ்வாறு ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் சிங்கள குடியேற்றங்களை நிறுவுவதும், பௌத்த கோயில்களைத் திறப்பதும், அவர்களினதும் சிங்கள அரசாங்கத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளது.

கடந்த இரண்டு வருடங்களாக தமிழ் மக்கள் மீது பொருளாதாரத் தடையையும் எரிபொருள்தடையையும் விதித்து தமிழ் மக்களின் பொருளாதார வாழ்வைச் சிதைத்துள்ள சிறிலங்கா அரசாங்கம், தமிழ் மக்களைப்பாதுகாக்கப் போராடுவதாகக் கூறுவது வேடிக்கையானது. யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டால், குறைந்தது 10,000 அப்பாவி மக்களாவது கொல்லப்படுவார்கள் எனத்தெரிந்திருந்தும் யாழ்ப்பாணத்தின் மீது தாக்குதலுக்குத் திட்டமிடும். சிறிலங்கா இராணுவம் இப்போர் தமிழரின் பாதுகாப்பிற்காக நடைபெறுகின்றது என்பது விந்தையாகவுள்ளது

ஆனால் தமிழ் மக்கள் இதை முன்னரே நன்கு உணர்ந்துள்ளனர். இராணுவம் ஆக்கிரமித்த பகுதியில் இருந்து மக்கள் வெளியேறியதில் இருந்தே புரிந்து கொள்ளலாம். சிறிலங்கா இராணுவத்தளபதிக்கு சில வேளை புரியாமல் இருக்கலாம், சிறிலங்கா இராணுவத்தளபதி விருப்பத்திற்கு ஏற்றால் போல்பகிரதப் பிரயத்தனம் எடுத்துக் கொண்டால், தமிழரின் தாயக மண்ணின் ஒருபகுதியை ஆக்கிரமிக்கலாம் ஒரு தொகுதி மக்களைப் பணயக் கைதிகளாகவும் பிடித்து வைத்திருக்கலாம். ஆனால் அது பாதுகாப்பும் அல்ல, விடுவிப்பும் அல்ல. தமிழர்கள் தேசிய உணர்விற்கு எப்பொழுது விடுதலைகிடைக்கின்றதோ அன்றே தமிழர் பாதுகாப்புடன் விடுதலை பெறுவர்.

---

இன்று நடைபெறவுள்ள உடுப்பிட்டி, வல்வெட்டித்துறை, கொடிகாமம், வரணி, உசன், நல்லூர், கொக்குவில், கொண்டாவில, இளவாலை, அம்பனை, அளவெட்டி ஆகிய கொத்தணிகளில் மேஜர் முரளி நினைவுதின புதிப் போட்டி புதன்கிழமையன்றும், மானிப்பாய், நவாலி ஆகிய [illegible] வியாழக்கிழமையன்றும் அத்துடன் ஏற்கனவே அறிவித்தபடி உரும்பராய், வசாவிளான் கொத்தணிகளுக்கான போட்டி புதன் அன்றும் நடைபெறும் என்பதனை யாழ் மாவட்ட மாணவர் இயக்க செய்திக் குறிப்பு அறிவிக்கின்றது.

## அன்னையர் முன்னணியினர் வழிபடத் தடைவிதிப்பு

காணாமற் போனவர்கள், மற்றும் கொலையுண்டவர்களின் பெற்றோர் தெய்வ வழிபாட்டில் ஈடுபட கொழும்பு முகத்துவாரம் காளி கோயிலுக்குச் சென்றபோது தடுக்கப்பட்டனர்.

காளி கோயிலில் அன்னையர் முன்னணி ஏற்பாடு செய்த பூசையில் கலந்து கொள்ளவே அவர்கள் அங்கு சென்றனர்.

செவ்வாய்க்கிழமை மூவாயிரத்திற்கு மேற்பட்ட அன்னையர் முன்னணி உறுப்பினர் காளி கோயிலுக்குச் சென்றபோது அங்கு நின்ற உயர் பொலிஸ் அதிகாரி காளி கோயில் கதவுகளைக் கோயில் நிர்வாகம் திறக்காது என்று தெரிவித்தார்.

கோயிலுக்கு வெளியில் தேங்காய்களை உடைத்துக் கற்பூரம் கொழுத்தி காளியின் ஆசியை வேண்டும்படி சிறிலங்கா பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தா ராஜபக்ஷ கேட்டுக்கொண்டார். தேங்காய்களை உடைத்த சமயம் கதவுகளை யாரோ திறக்க அன்னையர் முன்னணியினர் கோயிலுக்குள் பிரவேசித்தனர். ஆனால் மூலஸ்தானக் கதவுகள் திறக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

கொலைகளைச் செய்தவர்களுக்குத் தெய்வத்தின் தண்டனைகளைப் பெற்றுக் கொடுக்கவே காளி கோயிலில் இந்த வழிபாட்டுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டதாக மகிந்த ராஜபக்ஷ உள்ளூர், வெளியூர் செய்தியாளரிடம் தெரிவித்தார்.

## சுதந்திரக்கட்சிக்குள் கொந்தளிப்பு நிலைமை

(கொழும்பு)

சுதந்திரக் கட்சியின் கூட்டத்தில் கொந்தளிப்பு நிலைமை ஏற்படலாம். என்று அரச கட்டுப்பாட்டிலிருக்கும் பத்திரிகையொன்றில் செய்திகள் வெளிவந்துள்ளன.

எதிர்வரும் ஆகஸ்ட் இரண்டாம் திகதியன்று இடம்பெறவிருக்கும் இக் கட்சியின் மத்திய குழுவிற்கான தேர்தலில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களுக்கும், அனுரா பண்டாரநாயக்காவின் ஆதரவாளர்களுக்கும் இடையே பலத்த பலப்பரீட்சை இடம்பெறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. கட்சித்தலைமைப் பதவிக்கு திருமதி சிறிமாவோ ஏகமனதாக தெரிவுசெய்யப்படக் கூடுமெனினும், ஏனைய பதவிகளுக்கு பலத்த போட்டி ஏற்படக் கூடும். கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு திரு தர்மசிறி சேனநாயக்காவை சிறிமாவோ ஆதரிக்கும் அதேவேளை அனுரா, மகிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பார் என்று தெரியவருகின்றது.

---

ஜப்பானிய தொழிலதிபர்களுடனான தமது பேச்சுக்கள் ஜப்பானில் இருந்து முதலீடுகள் கணிசமான அளவு அதிகரிக்கும் என்ற நம்பிக்கைக்கு வழிவகுத்துள்ளது எனக்கூறிய அவர் ஜப்பான் பயணம் பற்றிக் கூறுகையில் அரசியல் மற்றும் தொழிற்றுறையினருடனான பேச்சுக்கள் இந்தியாவில் ஜப்பான் தனது முதலீடு

---

[illegible] னர் என்று தி.மு.க தலைவர் மு கருணாநிதி குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில்.

'தடா' சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நூற்றி ஐம்பது நாட்களுக்கு மேலாக மதுரை சிறையிலிருக்கும் [illegible] பதற்கு நான் அனுமதி கேட்டவுடன் அனுமதி மறுத்ததோடு ஜெகதீசனையும் ஜெயலலிதா அரசு மருத்துவமனையிலிருந்து மீண்டும் சிறைச்சாலைக்கு அனுப்பி வைத்தது. சிறையில் இருக்கும் வரை 15 6-92 இல் மருத்துவமனைக்கு பொலிஸ் காவலுடன் அழைத்துச் சென்றபோது அவருக்கு விலங்கு பூட்டப்பட்டு அழைத்துச் சென்றதாக ஒரு அதிர்ச்சி அளிக்கும் தகவலை மதுரை மாவட்ட கழகச் செயலாளர் பொன். முத்துராமலிங்கம் தெரிவித்தார்.

அது மட்டுமல்ல மறுநாள் 16-06-1992 காலையில் சென்னை சிறையில் தடா கைதியாக ஆறு மாதத்திற்கு மேலாக அடைக்கப்பட்டிருக்கும் நெல்லை வை. ரவிச்சந்திரனை சந்திப்பதற்காக சென்றிருந்த தம்பி வை. கோபால்சாமி எம் பி யும் என்னை சந்தித்து மூன்று நாட்களுக்கு முன்பு சென்னையில் ரவிச்சந்திரனையும் மருத்துவமனைக்கு விலங்கு மாட்டித்தான் அழைத்துச் சென்றார்கள் என்ற செய்தியைச் சொன்னார்.

பல மாதங்களாகத் 'தடா' கைதிகளாக சிறையில் பூட்டியும் கூட பழிவாங்கும் வெறி தணியாமல் அரசு இதுபோன்ற கொடுமையான முறையில் கழகத்தினர் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்வதை வன்மையாக கண்டிப்பதுடன் இந்த அராஜகச்செயல்கள் உட்படபல்வேறு எதேச்சதிகார ஊழல் மலிந்த இந்த அடக்குமுறை ஆட்சியின் போக்கை எதிர்த்து தி.மு.கழகம் விரைவில் ஒரு அறப் போராட்டத்தை அறிவித்திட வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அதற்குத் தயாராக இருக்குமாறும் கழக உறுப்பினர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மத்திய இணை அமைச்சர் கல்கத்தாவில் தாக்கப்பட்டார்

மத்திய அரசின் மனிதவளத்துறை இணை அமைச்சர் செல்வி மும்தா பானர்ஜி நேற்றுமுன்தினம் கல்கத்தாவில் இருக்கும் அவரது இல்லத்தில் வைத்து தாக்கப்பட்டுள்ளார். தெற்கு கல்கத்தாவில் அமைந்திருந்த அவரது வீட்டுக்குள் அமைச்சரைப் பார்ப்பதற்காக எனக் கூறிக் கொண்டு விரைந்த அடையாளம் தெரியாத ஒருவர் அமைச்சரின் அறையில்வைத்து அவரை பெல்ட்டினால் தாக்கினார். இதனால் மும்தா பானர்ஜிக்கு நெற்றியில் காயம் ஏற்பட்டது. தாக்கியவர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

## பிரான்சுடன் பாகிஸ்தான் உடன்படிக்கை கைச்சாத்து

பாகிஸ்தானும், பிரான்சும் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் துறைகளில் இணைந்து செயற்படுவது குறித்த உடன்பாட்டில் கையெழுத்திட்டுள்ளன.

பாரிசில் கடந்த வெள்ளிக்கிழமை இவ் உடன்படிக்கையில் பாகிஸ்தான் பாதுகாப்பு அமைச்சரும் பிரான்சின் பாதுகாப்பு அமைச்சரும் கையெழுத்திட்டனர்.

இவ் உடன்படிக்கையின் படி பாதுகாப்பு சாதனங்கள் தயாரிப்பு மற்றும் உதிரிப்பாகத் தயாரிப்பு என்பனவற்றிற்கு பிரான்ஸ் உதவி அளிக்கும் எனத் தெரிகின்றது.

## இராணுவ நடவடிக்கையை எதிர்த்து பதவி விலகல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் சிந்து மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து முஜாகித் ஹாமி இயக்கத்தை சேர்ந்த மத்தியமாநில அமைச்சர்கள் பதவி விலகிவிட்டனர். இவ் இயக்கம் தனது பதினைந்து எம்பிக்களையும் இருபத்தெட்டு எம். எல் ஏக்களையும் பதவி விலகும் படி பணித்திருப்பதாக ஏஜென்சிச்செய்திகள் கூறியுள்ளன

எனினும் இவ் இயக்கம் ஆதரவை விலக்கிக் கொள்ளுவதால் இருபது மாத கால நவாப் ஷெரீப் அரசுக்கு உடனடி ஆபத்து எதுவுமில்லை என்று ஏஜென்சி செய்திகள் கூறுகின்றன

# ஈழநாதம்

## வருடாந்தம் ஒருகோடி பேர் புகையிலை புற்றுநோயால் மரணம்

(கண்டி)

உலகில் வருடாந்தம் ஒரு கோடியே இருபது லட்சம் பேர் புகையிலைப் பாவனையால் ஏற்படும் புற்றுநோயால் மரணமடைகின்றார்கள் என்று பேராதனைப் பல்கலைக்கழக இரசாயன வியல் துறைப் பேராசிரியர் வெஸ்லி குணதிலக்கா தெரிவித்தார்.

இப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற "புற்றுநோய்க்கு எதிரான இரசாயனவியலாளர்களின் போராட்டம்" என்ற தலைப்பிலான கருத்தரங்கில் பேசும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

2050 ஆம் ஆண்டளவில் உலகில் வாராந்தம் ஐம்பது கோடி மக்கள் புகைத்தல் காரணமாக மரணமாவார்கள் என்றும், அவர்களில் இருபது கோடி மக்கள் இளவயதினராகக் காணப்படுவர் என்றும் தெரிவித்தார்.

அசுத்தமடைந்த காற்றை சுவாசிப்பது, அசுத்த நீரைப் பருகுவது ஆகியனவே புற்றுநோய்க்கு முக்கிய காரணமாகும் மார்பு, மூளை, இதயம், சிறுநீரகங்கள் போன்ற அவயவங்களில் புற்றுநோய் ஏற்படுகிறது.

வெற்றிலை சாப்பிடுபவர்கள் புகையிலையையும் சுண்ணாம்பையும் தவிர்ப்பதன் மூலம் இந்நோயை ஓரளவு அணுகவிடாது தடுக்கலாம் என்றும்,

இந்த நோய்க்கு அறுவைச் சிகிச்சை, கதிர்வீச்சு மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. உலகிலுள்ள இரசாயன வியலாளர்கள் இந்நோய்க்குரிய சிறந்த நிவாரணியை கண்டு பிடிக்கும் முயற்சியில் ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

### கண்டெடுக்கப் பட்டுள்ளது

சுன்னாகம் பிரதான வீதி திருமதி விக்னேஸ்வரமூர்த்தி கமலாதேவி என்பவருடைய முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் கோப்பாய் காவல் பணிமனையில் வந்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

★ ★ ★

தம்பிப்பிள்ளை கந்தசாமி என்பவருடைய அடையாள அட்டையும் (இல.320910480V) பணப்பையும் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக கோப்பாய் காவல்துறை பணிமனை செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

## கல்வி மீதான அடக்குமுறை; மாணவர் அமைப்பு கண்டனம்

தமிழ் மாணவர்கள் மீது சிறிலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் கல்வி ஒடுக்குமுறைகளை விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது. இது தொடர்பாக இவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில்

ஒடுக்குமுறை வரலாற்றின் உச்சகட்டமே தமிழ் மக்களின் கல்வி வளத்தை அழித்துச் சிதைப்பதாகும். தமிழ் இனத்தின் கருவை வேரறுக்கப் பயன்படுத்தப்படும் பிரதான ஆயுதமாக கல்வி அழிப்பு தொடர்கின்றது எனக் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

போட்டிப் பரீட்சைகளைப் பின்போடல் பின் அவற்றுக்குரிய பதில் பரீட்சைகளைப் போதியகால அவகாசமின்றி அறிவித்தல் பரீட்சை நிலையங்கள் மீதும் அதன் சூழல்களிலும் குண்டு வீச்சுத்தாக்குதல்களை மேற்கொள்ளல். மாணவர்கள் கல்வியைக் கற்க முடியாத சூழலை ஏற்படுத்தும் வகையில் தமிழர்பிரதேசங்கள் மீது குண்டு வீச்சு ஏறிகணைத்தாக்குதல்களை மேற்கொள்ளுதல், பொருளாதாரத் தடை, எரிபொருள் தடை என்பவற்றின் மூலம் உளவியல்ரீதியில் பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

கொடூரமான அடக்குமுறைகளுக்கு மத்தியிலும் எமது மாணவர்கள் தமது கல்வியை முன்னெடுத்து வருகின்றனர். இவ்வாறு விஞ்சி நின்ற தமிழ் மாணவர்களை அடக்க இப்போது புதியதெரிவு முறையை அமுல் நடத்த முயல்கிறது

உயர்கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற புதிய முறை தமிழ் மாணவர்களின் வெட்டுப் புள்ளிகளை எதிர்பார்க்க முடியாத அளவுக்கு உயர்த்தியுள்ளது. இதனால் தமிழ்மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்வது ஐம்பது சதவீதத்தால் குறையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### புலிகள்

இதேவேளை, முன்னேறும் முயற்சியில் ஈடுபட்ட இராணுவத்தினர் புலிகளின் ஆக்ரோசமான தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவத்தினர் தமது இறந்த சகாக்களின் சடலங்களை விட்டுவிட்டு சென்றுள்ளதாகவும் அங்கிருந்து கிடைக்கும் சில செய்திகள் தெரிவிக்கின்றன.

### 24மணி

ருந்து வெளியேறாமலும் தடுப்பதே தமது நோக்கம் எனவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

நேற்றுக் காலை 7.45 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட ஒப்பிரேசன் பலவேகய-2 இராணுவ நடவடிக்கைகளுக்கு ஆகாயக் கடல் தரைத் தாக்குதலுக்கு தாம் தயார்நிலையில் இருப்பதாகவும் தெரிவித்த இராணுவப் பேச்சாளர் ஒருவர் மேலதிக விபரங்களை தெரிவிக்க மறுத்துவிட்டார்.

இந் நடவடிக்கைகளுக்கு கூட்டுப்படைத்தளபதி கப்டன் பத்தன பந்துடன தலைமை தாங்குவதாக கொழும்பு சிங்கள பத்திரிகையொன்றுசெய்தி வெளியிட்டுள்ளது. நான்கு படையணிகள் இரண்டு முனைகளில் வெற்றிலைக்கேணிப்பகுதியில் நடவடிக்கைகளை மேற்கொண்டுவருவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### விமானப்படை

### நினைவஞ்சலிக் கூட்டம்

நாவற்குழி லவனிதாகுடியிருப்பில் இன்று மாலை 7-30 மணியளவில் இம் மாதம் வீரச்சாவைத் தழுவிக்கொண்ட வீரவேங்கை ஸ்ரீபவ் அவர்களின் நினைவஞ்சலிக் கூட்டம் நடைபெறவுள்ளது. தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம்பெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

### சிதைந்த

அபிப்பிராயப்பட்டனர். எனினும் பின்னர் பரீட்சார்த்தமான முறையில் சத்திரசிகிச்சை ஒன்றிற்கு அவர் உட்படுத்தப்பட்டார். அவ் பகுதியிலிருந்தும், முதுகிலிருந்தும் தசைத் துண்டுகள் வெட்டி எடுக்கப்பட்டு அவற்றின் உதவியுடன் சேதமடைந்த கைதைத்துப் பொருத்தப்பட்டது அதிசயிக்கத்தக்க வகையில் இச்சத்திரசிகிச்சை வெற்றியளித்தமையால் ஐம்பது வயதான தோமஸ் டி. சில்வா தமது கையையிழக்காமலேயே ஆஸ்பத்திரியிலிருந்து வெளியேறியுள்ளார்.

இந்த அதிசயிக்கத்தக்க சத்திரசிகிச்சையில் டாக்டர் ஜெயசிங்காவுடன் டாக்டர் சிவத்திரன் பணியாற்றினார்.

### 8 வேங்கைகள்

ரத்தினம் சிறிரஞ்சன் மட்டுவில் வடக்கு, மடடுவில்), வீரவேங்கை விரமணி (கணேசபிள்ளை சந்திரசேகரம் கன்னகிபுரம் திருக்கோணமலை), வீரவேங்கை கபில் (பாலசிங்கம் முரளிதரன் டச்சு றோட் அளவெட்டி வடக்கு அளவெட்டி) ஆகியோரே வீரச்சாவு அடைந்தவர்களாவர்.

இவர்களுக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக்கொள்கின்றனர்.

இவர்களின் புகழ் உடல்கள் இன்று மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு வலிகாமம், வடமராட்சி தென்மராட்சி மாவீரர் துயிலுமில்லங்களில் புதைகுழிகளில் விதைக்கப்படும்.

### வீரச்சாவு

லைப் புலிகள் போராளி கடற்புலி கப்டன் ஆதித்தன் (குணநாதன் கேதீஸ்வரன் காட்டுப்புலம், தொண்டமனாறு) 27-06-92 அன்று வீரச்சாவு அடைந்தார்

இவருக்குதமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீர வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.


## பிறந்தநாள் வாழ்த்து
### செல்வி ஜனார்த்தனிசச்சிதானந்தன்

செல்வி ஜனார்த்தனி சச்சிதானந்தன் தனது முதலாவது பிறந்தநாளை இன்று (29-06-1992) தனது இல்லத்தில் குதூகலமாகக் கொண்டாடுகிறார். இவரை அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தப்பாமார், மாமிமார் மாமா, பெரியம்மா சித்திமார், மற்றும் உற்றார், உறவினர் அனைவரும் நீடூழிவாழவென வாழ்த்துகிறார்கள்.

44/3, மணல்தறைலேன்,
கந்தர்மடம்.

(2732)

## மீண்டும் யாழ்ப்பாணத்தில்

யாழ் மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் தனது விற்பனை நிலையத்தை வாடிக்கையாளரின் நன்மை கருதி 303, பலாலி வீதி, யாழ்ப்பாணத்தில்(பரமேஸ்வரா சந்திக்கு அருகில்) திறந்துள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

பொது முகாமையாளர்,
யாழ் மாவட்ட புடைவை
நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்,
இருபாலைவீதி,
கோண்டாவில்.

(சி/4607)


## தேனீக்களுக்கான அவசர அழைப்பு

ஆண்டு 11 இனைச் சார்ந்த ஆண்கள் அனைவரும் இன்று காலை 7.30 மணிக்கு எமது நிறுவனத்திற்கு சமுகமளிக்கவும்.

"தேனீக்கள்"
யூனிவேர்சல் சமூகசேவைப்பிரிவு
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

[சி/4624]


## 45-ம் நாள் நினைவஞ்சலி



## 31ஆம் நாள் நினைவலைகள்



வீரப் பிறப்பு: 03 வீரச்சாவு: 30

## சுடுவெந்த புலவில் வீரச்சாவடைந்தோர்







# அமரர் திருமதி வள்ளிப்பிள்ளை செல்லத்துரை

தோற்றம் 15.01.1927 — மறைவு 17.05.1992

சிற்றில் நற்றூண் பற்றி நின் மகன்
யாண்டு உளனோ என வினவுதி என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேனோரும்
புலி சேர்ந்து போகிய கல் அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க் களத் தானே.


- காவற்பெண்டு [86]
புறநானூறு

புலோப்பளை,
பளை.

குடும்பத்தினர்

[சி/4621)

விரப் பிறப்பு: 03 – 02 – 1968



வீரச்சாவு: 30 – 05 – 1992

# கப்டன் செல்வன்
## (செல்லத்துரை தெய்வசபாநாதன்)

பிறந்த மனிதர்கள் இறந்துபோவதும்
இறந்த மனிதரை உலகம் மறந்து போவதும்
மனித வாழ்விலே நியதி தானடா

எனினும்

வீழ்ந்த புலிகளின்
வீரம் வாழ்ந் ட
செங்குருதி தனைக்கொடுத்தொரு
வரலாற்றுத் தூண்தனை
எழுத்தி நிறுத்துவோம்

- குடும்பத்தினர்

புலோப்பளை,
பளை.

(சி / 4625)

# பொருட்காட்சி நீடிக்கப்பட்டுள்ளது

கலாலயாவின் மனைப்பொருளியலும், கைத்திறனும் பொருட்காட்சி 30 6-92 (செவ்வாய்க் கிழமை) மாலை 6-00 மணிவரை நீடிக்கப் பட்டுள்ளது.

இடம்: கலாலயா, விக்டோரியா வீதி, யாழ்நகர்.
[ஆஸ்பத்திரியின் பின்புறம்]

[சி/4623] — இயக்குனர்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம்" பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 29 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது

# மரண அறிவித்தல்
## முருகேசு இராசதுரை

புத்தூர் கிழக்கு முருகேசு இராசதுரை காலமாகி விட்டார். அன்னார் இராசதுரை மாணிக்கம் அவர்களின் அன்புக் கணவரும், மனோகரன், ஜெயகௌரி, புஸ்பராணி, சுதாகரன், சுதாகரன், சசிதரன் (நேரு தமிழீழ விடுதலைப் புலிகள்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார். அன்னாரின் ஈமக் கிரியை 29-06 92 இன்று காலை 10-00 மணிக்கு புத்தூர் கிழக்கு மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

சல்கத் வீதி,
புத்தூர் கிழக்கு,
புத்தூர்.

தகவல்
சு. அருள்லிங்கம்

[2734]

இவ் செய்திகள் தெரிவிக்கின் றன.

**விமானப்படை**

ஊரியான், பச்சிலைப்பள்ளி, இயக்கச்சி, கரந்தாய் ஆகிய பகுதிகளை வட்டமிட்டு அகோரக் குண்டுவீச்சுத் தாக்குதல் களை நடாத்தின.

இதன்போது இரண்டு உலங்குவானூர்திகள் பரவலாகக் கலிபர் தாக்குதல்களை மேற்கொண்ட வண்ணமிருந்தன.

**கிளிநொச்சியில்:**

கிளிநொச்சிப் பகுதியில் நடாத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதல்களினால் விவசாய திட்டக்களஞ்சியம் தரைமட்டமானதுடன் இதனை அண்டிய பகுதிகளில் சில வீடுகள் சேதமடைந்தன.

**பளை:**

பளைப்பகுதியில் காலையும் மாலையும் நடாத்தப்பட்ட தாக்குதல்களினால் இறகு வெட்டச்சென்ற நீர்வேலியைச் சேர்ந்த நல்லியன்சின்னராசா (வயது 38) என்பவர் குண்டு வீச்சுக்கு இலக்காகி பச்சிலைப் பள்ளியில் உடல் சிதறிப் பலியானார்.

இதேவேளை பெருந்தெருக்கள் திணைக்களம், தென்னை வள ஆராய்ச்சி நிலையம் உட்பட பல வீடுகள் தரைமட்டமாகின.

**வடமராட்சி**

மருதங்கேணிப்பகுதி சந்தையடியில் சந்தை கூடும்வேளை அப்பகுதிகளை நோட்டமிட்டவாறு வந்த சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான உலங்குவானூர்தி ஒன்று அங்கு குழுமி நின்ற பொது மக்கள் மீது 50 கலிபர் துப்பாக்கிப் பிரயோகத்தினை மேற்கொண்டது.

இத்தாக்குதலைத் தொடர்ந்து சந்தையில்கூடிநின்ற வியாபாரிகளும் ஏனைய பொதுமக்களும் நாலாபுறமும் சிதறி ஓடினர். எனினும் இத்தாக்குதல் தொடர்பாக எவருக்கும் பாதிப்பு ஏற்பட்டதாகத் தெரியவில்லை.

(ச, பா)



லெப். ரகு
(பெரியதம்பி குகதாஸ்)



லெப். சிலம்பரசன்
(பரமானந்தம் தயாளன்)



2ஆம் லெப்.
புகழேந்தி
(நாகராசா மோகனராசா)



வீரவேங்கை
மகேந்திரம்
(பூலோகசிங்கம்
பத்மலோஜன்)

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

28. 06. 1992

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம்:- 4614

வடபகுதிக்கு வெளியே அனுமதிக்க வாகன இலக்கங்கள்:-

27-2084 40-2249, 26-3667, 27-8589, 42-526, 24-9938, 41-1227, 24-2161, 26-5071, 41-9457, 28-9449' 25 3654, 42-2043, 26-1349 42-3239 42-2364, 25-1946, 36-9823, 37-3827, 37-4077, 21-8175, 37-297, 25-8281.